**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE,**
**SIRKALI**

**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Criminal Procedure)

**Case No. C.C. 50/2019**

| | | | |
|---|---|---|---|
| Deposition of | | Prosecution: P.W-2, L.W- 4 | |
| Name | : Paramasivam | Defence | : |
| Father Name | :Edumpan | Court | : |
| Village | :Kuravalur, Thiruvenkadu | Taluk | :Sirkali |
| Calling | : | Religion | : |
| Age | : 38 /2022 | | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day 02.11.2022.

சத்தியபிரமாணம் பெறப்பட்டது.

**முதல் விசாரணை**

நான் தற்போது மேற்கண்ட முகவரியில் வசித்து ஓட்டுனர் வேலை செய்து வருகிறேன். கடந்த 22.10.2016- ம் தேதி இரவு 7 மணிக்கு மேல் ஆர்.கே.பி சேம்பர் அருகே சம்பவ இடத்திற்கு அருகே நான் நின்றுக்கொண்டிருந்தபோது அங்கிருந்த பரந்தாமன் மற்றும் என் முன்னிலையிலும், இந்த வழக்கு சம்பந்தமாக திருவெண்காடு காவல் நிலைய போலிசார் வழக்கு விபத்து நடந்த இடத்தை பார்வையிட்டு விசாரணை செய்து எங்கள் முன்னிலையில் பார்வை மகசர் மற்றும் மாதிரி வரைப்படம் தயார் செய்தார்கள். அந்த பார்வை மகசரில் சாட்சியாக சம்பவ இடத்தில் வைத்து நானும் பரந்தாமன் என்பவரும் கையெழுத்து செய்தோம்.. பார்வை மகசரில் வழக்கு விபத்து சம்பந்தமாக விசாரித்து கையெழுத்து வாங்கினார்கள். நீதிமன்றத்தில் என்னிடத்தில் காட்டப்படும் பார்வை மகசரில் உள்ள முதல் கையெழுத்து என்னுடையதுதான். ( **அந்த கையெழுத்து அ.சா.ஆ 2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** ) போலிசார் என்னை விசாரித்தார்கள்

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை**

வழக்கு விபத்து நடந்தது பற்றி எனக்கு தெரியாது. நான் கையெழுத்தை இரவு 7 மணிக்கு போட்டேன். என்னுடைய வாக்குமூலத்தில் நான் இரவு 9

மணிக்கு சம்பவ இடத்தில் இருந்ததாக கூறியுள்ளேன் என்றால் சரியல்ல. நான் கையெழுத்தை ஆர்.கே. சேம்பர் அருகில் வைத்து போட்டேன். நான் சம்பவ இடத்தில் கையெழுத்து செய்யவில்லை என்றாலும், காவல் நிலையத்தில் வைத்து தான் கையெழுத்து செய்தேன் என்றால் சரியல்ல. நான் சம்பவ இடத்தில் இல்லை என்றால் சரியல்ல. எங்கள் முன்னிலையில் தான் போலிசார் விசாரித்தார்கள். நான் போலிசார் கையிருப்பு சாட்சியாக போலிசார் கேட்டுக்கொண்டதற்கிணங்க எதிரிக்கு எதிராக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

எதிரி தரப்பு குறுக்கு விசாரணை முடித்துக்கொள்ளப்பட்டது.